**THE LABOUR COURT, SALEM**
**C.P.No.10 Of 2016**

**17.04.2025**

**RW3 –** திருமதி. மாலதி
முதல் விசாரணை தொடர்ச்சி – (எதிர்மனுதாரர் தரப்பில்)

1) 17.02.2025 – பொது மேலாளர் அதிகார கடிதம் – அசல் – Ex.R6.

2) வருங்கால வைப்புநிதி தொகை வழங்கியதற்கான விபரம் அலுவலக நகல் – EX.R7. (மேற்படி விபரம் மனுதாரருக்கு அனுப்பப்படவில்லை என மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்து ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)

3) ஓய்வூதிய கணக்கீடு விவரம் – நகல் – Ex.R8.

4) 04.01.2018 – 13 வது ஊதிய ஒப்பந்தம் – நகல் – Ex.R9.

5) பென்சன் தொகை மற்றும் முன்கூட்டுத்தொகை வழங்கிய விபரம் – சான்றொப்பம் செய்த ஜெராக்ஸ் – Ex.R10.

**குறுக்குவிசாரணை – மனுதாரர் தரப்பில்**

இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். மனுதாரர் இந்நீதிமன்றத்தின் மூலமாக என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பென்சன் சம்பந்தமாக மட்டும் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரர் 31.05.2015 ல் பணிஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அவர் பணிஓய்வு பெற்ற அடுத்த மாதம் முதல் பென்சன் கொடுக்கப்பட்டு வருகிறது. Ex.R8 ஆவணப்படி மனுதாரரின் அடிப்படை சம்பளமாக எவ்வளவு கணக்கிடப்பட்டுள்ளது என்றால் மனுதாரர் அடிப்படை சம்பளம் ரூ.10,960/–, கிரேடு பே ரூ.2,100/–. மனுதாரருக்கு கடைசியாக வாங்கிய சம்பள அடிப்படையில் பென்சன் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கு செட்டில்மெண்ட்படி கொடுக்கவேண்டிய தொகையை கணக்கிடாமல்

கடைசியாக வாங்கிய மாதசம்பளம் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் பணிஓய்வு பெற்றபிறகு பணிக்கொடை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மனுதாரருக்கு 26 வருடம் பணிக்காலம் கணக்கிடப்பட்டுள்ளது. மனுதாரர் பணியில் சேர்ந்த தேதி 27.11.1987. மனுதாரர் பணிஓய்வு பெற்ற தேதிக்கும், மனுதாரர் பணியில் சேர்ந்த தேதிக்கும் இடையே 28 வருட காலம் வருகிறது என்றால் சரிதான். தினக்கூலி அடிப்படையில் வேலை செய்த நாட்களும், தொகுப்பூதிய அடிப்படையில் வேலை செய்த நாட்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. 1989 செட்டில்மெண்ட்படி பணியில் சேர்ந்த தேதி முதல் வேலை காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று சொன்னால் இல்லை. Ex.R10 ஆவணப்படி முதல் மாதம் மனுதாரருக்கு எவ்வளவு பென்சன் தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.10,268/-. மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட பென்சன் தொகைக்கும், அவருக்கு அடிப்படை சம்பளம் மற்றும் தரஊதிய அடிப்படையில் பென்சன் தொகை கணக்கிடப்பட்டால் இரண்டு தொகைக்கும் இடையே வித்தியாசம் வருகிறது என்றால் சரியல்ல.

எங்களுடைய கணக்கீட்டின் படி மனுதாரருக்கு கணக்கிடவேண்டிய அடிப்படை ஊதியம் ரூ.6,095/- மற்றும் அகவிலைப்படி, மருத்துவப்படி சேர்த்து தரப்படவேண்டும் என்று சொன்னால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள கணக்கீடு சரியானது. மனுதாரருக்கு அடிப்படை ஊதியமாக ரூ.5,659/- கணக்கிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவறான கணக்கீடு என்றால் சரியல்ல. இந்த தவறான கணக்கீட்டின் அடிப்படையில்தான் மனுதாரருக்கு முன்கூட்டிய ஓய்வூதியம் கணக்கிடப்பட்டுள்ளது எனறால் நாங்கள் கொடுத்த கணக்கீடு சரியானது. மனுதாரரின் வைப்புநிதி 31.05.2015 ல் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு 16.10.2015 ல் வைப்புநிதி கொடுக்கப்பட்டுள்ளது.

மனுதாரருக்கு காலதாமதமாக வைப்புநிதி கொடுக்கப்பட்டதற்கு வட்டி தர நிர்வாகம் கடமை பட்டுள்ளது என்றால் மனுதாரருக்கு ஒரு முறை வட்டி கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு முன்கூட்டிய ஓய்வூதிய தொகை மனுதாரர் பணிஓய்வு பெற்ற நாளில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். காலதாமதமாக மேற்படி தொகை கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த தொகைக்கு வட்டி கொடுக்க நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது என்றால் வட்டியாக ரூ.6,759/—ஐ 16.08.2018 ல் கொடுத்துள்ளோம்.

அவ்வாறு வட்டி கொடுக்கப்பட்டது சம்பந்தமாக மனுதாரரூக்கு தகவல் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றும், அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றும் கேட்டால் மனுதாரருக்கு தகவல் கொடுத்ததாக ஆவணங்கள் இல்லை. ECS மூலம் தொகை அவருக்கு அனுப்பப்பட்டது. மனுதாரருடைய மொத்த பணிக்காலம் 28 வருடங்கள் என பணிக்கொடை வழக்கு எண்.75/2015 ல் கணக்கிடப்பட்டு மனுதாரருக்கு பணிக்கொடை கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மனுதாரருக்கு ஓய்வூதிய தொகை கணக்கிடும்போது 13 வது ஊதிய ஒப்பந்தத்தின்படி மனுதாரருக்கு அடிப்படை சம்பள தொகை கணக்கிடப்படவில்லை என்றால் 01.09.2016 முதல் ஒய்வு பெறுபவர்களுக்கு மட்டும்தான் 13 வது ஊதிய ஒப்பந்தத்தின்படி அடிப்படை சம்பள தொகை கணக்கிடப்படும். மனுதாரர் 31.05.2015 அன்று பணிஓய்வு பெற்றுள்ளார். மனுதாரருக்கு இன்றைய தேதியில் நடப்பில் இருக்கக்கூடிய 234% அகவிலைப்படி கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். தற்போது 146% அகவிலைப்படி ஜனவரி 25 முதல் வழங்கப்பட்டு வருகிறது. 234% அகவிலைப்படி ஓய்வூதியம் பெறும் பணியாளர்களுக்கு தற்போது வழஙகப்பட்டு வருகிறது என்றால் 12 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. 5 வது ஊதிய கமிஷன்படி அலுவலக ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதிய நம்பக நிதி ஆணையத்தில் மொத்தம்

எத்தனை உறுப்பினர்கள் என்றால் சேலத்தில் மட்டும் ஓய்வூதியம் பெறுபவர்கள் 5,500 பேர். இதில் எத்தனை பேர் 234% அகவிலைப்படி பெறுகிறார்கள் என்றால் 8 பேர். இந்த 8 பேருக்கு மட்டும் அகவிலைப்படி கொடுக்கலாம் என்பதற்கு ஏதாவது ஆவணம் எங்களிடம் உள்ளதா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி என்பது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஊழியர்களின் ஓய்வூதியதாரர்களுக்கான அமைப்பு என்றால் சரிதான். இதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தில் பணிபுரிந்த அனைவரும் உறுப்பினர் ஆகலாம் என்றும், அதில் ஓட்டுநர், நடத்துநர் என்ற பாகுபாடு இல்லை என்றும் சொன்னால் சரிதான். மேற்படி அமைப்பின் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கும்போது ஒரே மாதிரியான நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்றால் ஓய்வூதிய கணக்கீடு ஒரே மாதிரிதான் கணக்கிடப்படுகிறது.

ஓய்வூதியம் வழஙகப்படுவதில் ஒரேமாதிரியான நடைமுறை உள்ளதா என்றால் இல்லை. அகவிலைப்படி கணக்கீடு மட்டும் மாறுபடும். அகவிலைப்படி கணக்கீடு செய்வதில் ஊழியர்களுக்குள் வேறுபாடு காட்டப்படுகிறது என்றால் இல்லை. ஊழியர்களுக்குள் வேறுபாடு கிடையாது. ஊழியர்களுக்குள் ஒரு சிலருக்கு நடப்பு அகவிலைப்படி கணக்கீடு செய்யப்படுகிறது என்றும், ஒரு சிலருக்கு 119% அகவிலைப்படி கடந்த பிப்ரவரி 25 வரை கணக்கிடப்பட்டது என்றால் இல்லை. 2016 க்கு முன்பு பணிஓய்வு பெற்றவர்களுக்கு 119% அகவிலைப்படியும், 2016 க்கு பின்பு பணிஓய்வு பெற்றவர்களுக்கு 5% மும் வழங்கப்பட்டு வருகிறது. 2016 க்கு பின்பு ஒவ்வொரு வருடமும் அரசு ஆணையின்படி உயர்த்தப்பட்ட நடப்பில் இருக்கும் அகவிலைப்படி 234% என்றால் இல்லை. பின்பு எவ்வாறு சேலத்தில் 8 நபர்களுக்கு மட்டும் 234% அகவிலைப்படி கணக்கிடப்படுகிறது என்றால் 5 வது ஊதிய கமிஷன்படி மேற்படி நபர்களுக்கு பென்சன் Revise செய்யப்படாததால் அவர்களுக்கு DA 234% வழங்கப்பட்டு வருகிறது. 5 வது

ஊதிய கமிஷன்படி மேற்படி நபர்களுக்கு DA 234% வழங்கவேண்டும் என உத்தரவு ஏதாவது உள்ளதா என்றால் தற்போது என்னிடம் உள்ள கோப்பில் இல்லை. அந்த உத்தரவை நான் தாக்கல் செய்ய முடியுமா என்றால் உத்தரவு இருக்கிறதா என பார்க்கவேண்டும். மனுதாரருக்கு காலதாமதமாக கொடுக்கப்பட்ட ஓய்வூதிய பணப்பலன்களுக்கு 6% வட்டி கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மனுதாரர் காலதாமதமாக கொடுக்கப்பட்ட மொத்த பணப்பலன்களுக்கு 18% வட்டி கொடுக்குமாறு மனுவில் கோரியுள்ளார் என்றால் சரிதான்.

நாங்கள் அந்த வட்டியை கணக்கிட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுடைய கணக்கீட்டில் மனுதாரருக்கு அடிப்படை சம்பளமும், மொத்த பணிக்காலமும் தவறாக கணக்கிட்டு தொகை ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது என்றும் அந்த கணக்கீடு தவறு என்றும் சொன்னால் எங்களது கணக்கீடு சரியானது.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem